**தலைப்பு 228 - நீதிமன்ற நிர்வாக திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 21 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணைக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 6,267.02 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 5,817.05 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மெத்த தேறிய நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 449.97 மில்லியன் அதாவது 7.18 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 5,061.93 | 4,992.98 | 68.95 | 1.36 |
| மூலதனம் | 1,205.09 | 824.07 | 381.02 | 31.62 |
| மொத்தம் | **6,267.02** | **5,817.05** | **449.97** | **7.18** |

**2.1 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22801 ஆம் விடய இலத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 382.16 | 382.16 | 222.22 | 265.85 | 1,200.00 | 893.99 |

**2.2 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/000/00328/0015/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 288.2 மில்லியனாகும்.

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழுள்ள 6000/0000/00/0015/0109/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8,046.24 மில்லியனாகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்குறிப்பிட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பொறுப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | தண்டப் பணம் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 586(1) | கம்பஹா உயர் நீதிமன்றத்தில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிலுவை தண்டப் பணம் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 586(2) | கம்பஹா உயர் நீதிமன்றத்தில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகைக்கு இடையே ரூபா 12,254,467 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,779,623 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான கால வீச்சிலிருந்து காணப்பட்டுவந்தன.

**3.3 சொத்துக்களின் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக மாதமொன்றுக்கு ரூபா 550,000 வாடகைக்கு ஐந்து மாடிக் கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தில் 2 மாடிகள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2016 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் அந்த அனைத்து அறிக்கைகளும் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 94(1) | 5,394,853 | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை மிகைத்து கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 103(ஆ) | 291,444 | திணைக்களத்திற்குரிய 06 வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொலிசிற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை |

(ஆ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| 2011 மே 13 ஆந் திகதிய 333 ஆம் இலக்க நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மற்றும் 2011 சனவரி 18 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க மற்றும் 2014 மே 07 ஆந் திகதிய 01/2011(1) ஆம் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கைகள் | - | கம்பஹா உயர் நீதிமன்றத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய 11 உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல் மற்றும் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாமல் கைவிடல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | மாத்தறை நீதிமன்றத் தொகுதி நிர்மாணம் | 1,119,552,000 | 2015 ஆம் ஆண்டின் போது | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | நடுவர் தீர்ப்பு நிலைய நிர்மாணம் | 5,000,000 | 2015 ஆம் ஆண்டின் போது | நிலையத்தின் செயற்பாட்டிற்குத் தேவையான கம்பனி ஸ்தாபிக்கப்படாதிருந்தமையால் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமை |

### (ஆ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 வரையான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| (i) | ஹங்குரன்கெத்த நீதவான் நீதிமன்றக் கட்டிடம் | 4,372,430 | 1999.12.07 | 874,486 | காணிப் பிரச்சினை தீர்வு செய்யப்படாமை |
| (ii) | கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றக் கட்டிடம் | 13,043,563 | 2004/09/04 | 1,138,500 | அமைச்சின் செயலாளரினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை |
| (iii) | கணுவன நீதவான் நீதிமன்ற கட்டிடம் | 20,129,014 | 2010/08/06 | 4,098,998 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (iv) | மாத்தளை சட்ட உதவி நிலையம் மற்றும் சமுதாயம் சார் சீர்திருந்த கட்டிடம் | 5,394,509 | 2007/12/31 | 938,175 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (v) | செங்கலடி நீதிமன்றத் தொகுதி நிர்மாணம் | 4,812,500 | வெளிப்படுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை. |
| (vi) | புத்தளம் நீதவான் சுற்றுலா விடுதிக்கட்டிடம் | 12,336,496 | வெளிப்படுத்தப்பட வில்லை | - | காணி தொடர்பான சிக்கலினால் |
| (vii) | நொச்சியாகம நீதிமன்ற நிர்மாணம் | 15,030,559 | வெளிப்படுத்தப்பட வில்லை | 4,880,000 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

**3.6 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டிலுள்ள உயர் நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களிற்கிடையே 2015 இல் 158,122 வழக்குகளும், 25 மாவட்ட நீதிமன்றங்களில் 64,522 வழக்குகளுமாக 84 நீதிமன்றங்களில் 235,561 வழக்குகள்

தீர்வுசெய்வதற்கு இருந்தன. அதற்குரிய காலப்பகுப்பாய்வொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **காலப்பகுதி** | **நீதிமன்றங்களின் எண்ணிக்கை** | **வழக்குகளின் எண்ணிக்கை** | **தீர்வுசெய்வதற்குள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை சதவீதமாக** |
|---|---|---|---|
| **ஆண்டுகள்** | | | |
| 20 இற்கு மேல் | 34 | 764 | 0.33 |
| 10 – 20 இற்கு இடையே | 69 | 6,762 | 2.87 |
| 5 - 10 இற்கு இடையே | 80 | 19,335 | 8.21 |
| 3 – 5 இற்கு இடையே | 83 | 40,756 | 17.30 |
| 1 - 3 இற்கு இடையே | 83 | 66,086 | 28.05 |
| 1 இற்கு குறைய | 82 | 101,858 | 43.24 |
| மொத்தம் | | **235,561** | **100.00** |

(ஆ) நாட்டிலுள்ள 39 தொழில் நியாய சபைகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,411 வழக்குகள் தீர்வுசெய்வதற்கு இருந்தன. அதற்குரிய காலப்பகுப்பாய்வொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **காலப்பகுதி** | **தொழில் நியாய சபைகளின் எண்ணிக்கை** | **வழக்குகளின் எண்ணிக்கை** | **தீர்வு செய்வதற்குள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை சதவீதமாக** |
|---|---|---|---|
| **ஆண்டுகள்** | | | |
| 15 இற்கு மேல் | 3 | 5 | 0.35 |
| 10 - 15 இற்கிடையே | 5 | 5 | 0.35 |
| 5 - 10 இற்கிடையே | 24 | 57 | 4.04 |
| 3 -5 இற்கிடையே | 32 | 213 | 15.10 |
| 1 - 3 இற்கிடையே | 26 | 506 | 35.86 |
| 1 இற்கு குறைய | 13 | 625 | 44.30 |
| **மொத்தம்** | | **1,411** | **100.00** |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 386 | 400 | - | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 85 | 62 | 23 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 5,897 | 4,275 | 1,622 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 4,273 | 3,406 | 867 | - |
| | மொத்தம் | 10,641 | 8,143 | 2,512 | 14 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நீதிமன்ற முறைமையில் 2,512 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், 2015 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை தொடர்பில் இவ்வெற்றிடங்கள் காணப்பட்டமை தொடர்பில் கருத்திற்கொள்ளக்கூடிய தாக்கமொன்று ஏற்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சிரேஷ்ட மட்டத்தில் 14 மிகை பதவிகளை அங்கீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.